DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 532/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | ரவிசந்திரன் |
|---|---|
| Father / Husband Name | ராமலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **03.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் மனு வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நான் நகை அடகு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். மேற்படி தொழிலை அரசு அனுமதி பெற்றுதான் நடத்த வேண்டும் என்றால் சரிதான். நான் மேற்படி நகை அடகு கடையின் உரிமம் எண் குறித்து குறிப்பிட்டு வழக்கின் மனு, பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் வரவு செலவு விவரங்களுக்கு வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வருமான வரி ஆவணங்களை நான் கடன் கொடுத்த விவரங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த மேற்படி வருமான வரி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எதிரியை எந்த முறையில் தெரியும் என்றால் அவர் அச்சிறுபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த போது எனக்கு பழக்கம் ஆனார். மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கின் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு உண்மையில் எவ்வாறு பழக்கம் என்றால் அவர் எனக்கு எவ்வாறு பழக்கம் என்பதை பற்றி நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் மற்றும் இந்த வழக்கின் மனுவில் குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் அவர் எனக்கு பழக்கம் இல்லை என்பதால் தான் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. 2018 ம் வருடம் முதல் எதிரி எனக்கு பழக்கம் ஆவார். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்த ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. எதிரி என்னிடம் எந்த தேதியில் பணத்தை கடனாக கேட்டார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் பணம் கொடுத்ததற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரி என்னிடம் கடனாக பணம் கேட்டார். நான் பராமரிக்கும் டைரியில் அன்றாடம் வரவு செலவு கணக்கு மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றை குறித்து வைத்திருப்பேன்

என்றால் சரிதான். மேற்படி டைரியை நான் வைத்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஒருவரிடம் நகை வாங்கிக்கொண்டு கடன் கொடுப்பேன் என்றாலும் அவ்வாறு நகை இல்லை என்றால் ஏதேனும் ஆவணத்தை பெற்றுக்கொண்டு அவருக்கு கடன் கொடுப்பேன் என்றாலும் சரிதான். நான் எதிரியிடம் எதை வாங்கிக்கொண்டு கடன் கொடுத்தேன் என்றால் எதிரி என்னிடம் வழக்கு காசோலையை 28.08.2022 ம் தேதி கொடுத்து பணம் வாங்கி சென்றார். மேற்படி காசோலை பூர்த்தி செய்யப்பட்டதா அல்லது பூர்த்தி செய்யப்படாததா என்றால் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் செய்யப்பட்ட காசோலையை மட்டும் கொடுத்தார். சுமார் 2 வருடங்கள் கழித்து நான் கொடுத்த பணத்தை கேட்ட போது அவர் ரூபாய் 5,55,000/- நிரப்பி காசோலையை என்னிடம் கொடுத்தார். நான் தாக்கல் செய்த புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரி என்னிடம் முதலில் கொடுத்த கையொப்பம் மட்டும் செய்த காசோலையை கொடுத்த விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். பொதுவாக ஒரு நபர் பணம் கேட்டால் அவரின் வருமானம், தொழில் மற்றும் விலசத்தை தெரிந்து கொண்டுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணம் வாங்கிய போது அவர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அச்சிறுபாக்கத்தில் வேலைசெய்து கொண்டிருந்தாரா என்றால் அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது டெப்டேஷனில் பள்ளிக் கல்வித்துறையில் வேலை செய்து கொண்டிருந்தார். எதிரி என்னிடம் பணம் கேட்கும் போதும் நான் பணம் கொடுத்தபோதும் அவர் அச்சிறுபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

3. நான் பணத்தை யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் என் கடையில் வைத்து கொடுத்தேன். பொதுவாக அடகு கடை என்பதால் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எதிரி என் கடையில் பணம் வாங்கும் போது அந்த நிகழ்வும் எனது கடையில் இருக்கும் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பதிவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வரும் காலங்களில் தாக்கல் செய்வேனா என்றால் அதின் capacity என்ன என்று எனக்கு தெரியவில்லை. பதிவு இருந்தால் நான் தாக்கல் செய்கிறேன். பொதுவாக கண்காணிப்பு கேமராவில் capacity முடியும் போது அதன் பதிவை Hard disk ல் பதிவு எடுத்து வைத்திருப்பேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக அதன் பதிவு இருக்கிறதா என்று தெரியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் கேட்கும் போதும் நான் பணம் கொடுத்தபோதும் அவர் அச்சிறுபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் பணி புரியவில்லை என்றாலும் 16.03.2022 அன்று அவர் சென்னைக்கு பணி மாறுதல் பெற்று சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக அவர் அச்சிறுபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் பணி புரிந்தார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. என் மனைவியின் பெயர் கௌரி ஆகும். என் மனைவி எதிரி பணிபுரியும் அதே பள்ளியில் வேலை செய்து வருகிறார். என் மனைவியின் மூலமாகதான் எதிரி எனக்கு பழக்கும் என்றால் இல்லை. எதிரியும் என் மனைவியும் ஒரே பள்ளியில் பணி புரிந்த விவரத்தை எனது ஆவணங்களில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் மனைவியுடன் எதிரி பணி புரிந்ததால் அவர் மேற்படி பள்ளியில் வேலை செய்கிறாரா என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நான் தொழில் சம்மந்தமாக எனது மனைவியிடம் கேட்கமாட்டேன். எதிரியை எனது மனைவி மூலமாக தெரியும்

என்றாலும் அவர் மூலமாக தான் எதிரியின் காசோலையை வேறு வகையில் பெற்று அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ஆமாம். வருமான வரி சட்டப்படி ரூபாய் 4 லட்சத்தை ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்ற விதி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியிடம் நான் பணத்தை எவ்வாறு கேட்டேன் என்றால் போன் மூலமாக கேட்டேன். அவர் வேலை செய்வதாக சொன்ன இடத்தில் நேரில் சென்று பார்த்தபோது அவர் அங்கு இல்லை. அவரின் நண்பரை பார்த்தேன். சுமார் 1 அல்லது 1 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் சென்று பார்த்தேன். நான் இதுவரை தொலைபேசியில் எத்தனை முறை எதிரியை தொடர்பு கொண்டுள்ளேன் என்றால் 100 முறை ஆகும். சுமார் 2 முறை தொலைபேசியில் எதிரி என்னிடம் பேசினார். 2022 முதல் 2023 வருடம் வரை நான் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நான் எதிரிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எதிரியை உண்மையில் நேரடியாக தேடி சென்றிருந்தால் அவர் எந்த ஊரில் உள்ள பள்ளியில் பணிபுரிந்தார் என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. என் மனைவியும் எதிரியும் ஒரே பள்ளியில் வேலை செய்ததால் எதிரி எந்த பள்ளிக்கு பணி மாறுதல் பெற்று சென்றார் என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

5. இன்றைய தேதி வரை எதிரி எந்த பள்ளியில் வேலை செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு காசோலை எதிரி கொடுத்த காசோலை என்றால் சரிதான். **நான் வழக்கு சம்மந்தப்பட்ட தேதிகள் அனைத்தையும் என் கையில் எழுதி வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். (சாட்சியின் கையினை காண்பிக்க சொல்லி பார்த்த போது அதில் அவர் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்ட தேதிகளை எழுதி வைத்திருந்தார்)** வழக்கு காசோலையை திரும்பவும் 2024 ம் வருடத்தில் அவர் என் கடையில் வைத்து கொடுத்தார். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்த ஆவணங்களில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்று எனக்கு தெரியாது. கண்காணிப்பு கேமராவை பார்த்தால் மேற்படி விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பதிவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனி வரும் காலங்களில் தாக்கல் செய்வேனா என்றால் பதிவு இருந்தால் தாக்கல் செய்வேன். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் மற்ற விவரங்களும் வெவ்வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. எதிரி பணி மாறுதல் ஆகி சென்ற பிறகு அவர் விட்டு சென்ற காசோலையை என் மனைவி மூலமாக பெற்று அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அவர் உண்மையில் என்னிடம் காசோலையை கொடுத்து கடன் பெற்றிருந்தால் அதற்கான ஆதாரமாக கண்காணிப்பு கேமராவின் பதிவு மற்றும் தேதியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும் நான் கையில் தேதி எழுதி வைத்து சாட்சியம் அளித்திருக்க மாட்டேன் என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களும் புகார் மனுவில் சொல்லப்பட்ட விவரங்களும் வெவ்வேறாக உள்ளது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.